12. அரசினர் தீர்மானம்.

விதி 32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நேரம் 1.43 ஆகிறது. நிறைய உறுப்பினர்கள் பேசுவதற்கு விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். எல்லோரும் பேசி, அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்குவதற்கு இப்போது நேரம் இருக்குமா அல்லது நாளையதினம் கேள்வி நேரத்தை ரத்து செய்துவிட்டு அந்த நேரத்தில் இதை எடுத்துக்கொள்ளலாமா என்பது குறித்து அவையின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''வழக்கம் போல் சட்டப் பேரவையின் முதல் ஒரு மணிநேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32-ஐ 27—3—1992 அன்று தளர்த்தி அந்த நேரம் அரசின் அலுவல்களுக்காக எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியைக் கோரினேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிந்து விட்டார்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி).

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27—3—1992) காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.45 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.